வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 20.05.2024 திங்கட்கிழமை இதழ் : 141 பக்கங்கள் : 12

### தமிழ் பொது வேட்பாளர் விவகாரம்:

# தேர்தல் அறிவித்த பின்னரே தமிழ் அரசு முடிவு எடுக்கும்!

வவுனியா, மே 20

**தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அவசரமாக முடிவு எடுப்பதில்லை. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே இது தொடர்பான இறுதி முடிவை எடுப்பது என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு நேற்று வவுனியாவில் விருந்தினர் விடுதி ஒன்றில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில்கூடிப் பேசியது.

தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவது தொடர்பாக சிவில் அமைப்புகள் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை அண்மையில் சந்தித்து பேசின. இது தொடர்பான கட்சியின் முடிவை அவர்களுக்கு தெரிவிப்பதற்கு இருவார கால

11

### இனப்படுகொலை விவகாரம்:

## இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு பிழையான தகவலை பரப்புகிறது

### கனடாவின் பிரம்டன் நகர மேயர்



கொழும்பு, மே 20

இனப்படுகொலையை நிராகரிக்கும் இலங்கை அரசாங்கம் சர்வதேச தலையீடுகளில் ஈடுபடுவதுடன் திட்டமிட்டு பிழையான தகவல்களை பரப்புவதிலும் ஈடுபட்டுள்ளது என்று கனடாவின் பிரம்டன் மேயர் பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

கனடாவின் பிரம்டன் நகரில் நடந்த முள்ளிவாய்க்கால்

11

## வழக்காளிக்கு நிவாரணம் வழங்கி வழக்கை முடிவுறுத்தத் தீர்மானம்!

### இலங்கை தமிழ் அரசு கட்சி எடுத்தது

வவுனியா, மே 20

இலங்கை தமிழ் அரசு கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கில் வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்கி வழக்கை நிறைவுக்குக் கொண்டுவருவது என்று அந்தக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

அந்தக் கட்சியின் மத்திய குழு நேற்று வவுனியாவில் கூடியபோதே இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், வழக்காளிகளின் சட்டத்தரணிகளுடன் சுமுக பேச்சை நடத்தி - இணக்கம் எட்டும் விடயத்தை கையாளும் பொறுப்பு சட்டத்தரணிகளான எம். ஏ. சுமந்திரன், கே. வி. தவராசா ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும், கட்சி யின் தலைவர் உட்பட ஏனைய நிர்வாகிகள் தெரிவையும் மீள நடத்துவது குறித்தும் முடிவு செய்யப்பட்டது.

(ஐ)

## இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாக்க கனடா முயல்கின்றது!

### கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ

ரொறன்ரோ, மே 20

இலங்கையில் மனித உரிமைகளை கனடா வலுவான விதத்தில் பாதுகாக்க முயல்கின்றது என்று தெரிவித்துள்ள கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ, போர் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளுக்கு விதித்த தடைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15 வருடங்களுக்கு முன்னர் இலங்கை உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்தது. முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் உயிர்களை இழந்தனர்.

இன்றுவரை பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் - காயமடைந்துள்ளனர் - இடம் பெயர்ந்து உள்ளனர். இன்று நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைத்தவர்கள்

11

## ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும்

### அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

யாழ்ப்பாணம், மே 20

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி வெளியிட்ட நீண்ட அறிக்கையின் முக்கிய அம்சம் மட்டும் வருமாறு,

சிங்கள ஆட்சியாளர்கள் மீது முற்றுமுழுதாக வெறுப்படைந்து - விரக்தியடைந்து -

11

## ஒக். 5 அல்லது 12இல் ஜனாதிபதி தேர்தல்?

### தேர்தல் ஆணைக்குழு ஆராய்வு

கொழும்பு, மே 20

எதிர்வரும் ஒக்ரோபர் 5 அல்லது 12ஆம் திகதிகளில் ஒரு தினத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஆலோசனை நடத்தியுள்ளதாக அறிய வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 16ஆம் திகதிக்குள் நடத்தப்படும் என்று கடந்த வாரம் தேர்தல்கள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இந்த நிலையிலேயே

11



## முதல் ஐ. பி. எல். விக்கெட்டை வீழ்த்தினார் வியாஸ்காந்த்

ஹைதராபாத், மே 20

பஞ்சாப் அணிக்கு எதிராக நேற்றைய தினம் தனது இரண்டாவது போட்டியில் விளையாடிய யாழ்ப்பாணத்தை சேர்ந்த வி. வியாஸ்காந்த் முதல் விக்கெட்டை வீழ்த்தி அசத்தினார். பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பிரப்சிம்ரன் சிங்கின் விக்கெட்டையே அவர்

11

## ஈரான் ஜனாதிபதி பயணித்த ஹெலி விபத்தில் சிக்கியது!

### தேடுதலில் எதுவும் கிடைக்கவில்லை ஜனாதிபதியுடன் தொடர்பும் கிட்டவில்லை



தெஹ்ரான், மே 20

ஈரானின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் ஞாயிற்றுக் கிழமை மோசமான வானிலையால் அவசரமாக தரையிறக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனினும், ஜனாதிபதி

11

## ரணிலுக்கே மீண்டும் ஆதரவு பேச்சை ஆரம்பித்தது பெரமுன!

கொழும்பு, மே 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஆதரவளிக்கும் வகையில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பரந்த கூட்டணியின் கீழ் பொது வேட்பாளராக ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார் என்று அரசாங்கத்தின் உயர்மட்டத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

பெரமுனவின் பாராளுமன்றக் குழு ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் நிலையில் அந்தக் கட்சியின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை சேர்ந்த உறுப்பினர்களும் ரணிலை

11

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இன்றைய பத்தியை ஊர்க்குருவி எழுதப்போவதில்லை. அவருக்கு ஓர் அரசியல் கட்சி ஒன்றின் பிரமுகரிடமிருந்து கிடைத்த கட்டுரை ஒன்றை இங்கே அப்படியே தருகின்றேன். அர்ச்சனா என்ற பெயரில் அவர் எழுதியுள்ள அந்தக் கட்டுரையை அவர் எதற்காக ஊர்க்குருவிக்கு அனுப்பினார் என்பது தெரியவில்லை. "ஈழநாடு"வில் பிரசுரிக்க விரும்பியிருந்தால் அவர் ஆசிரியருக்கே அனுப்பியிருப்பார். ஆனால், அவர் ஊர்க்குருவிக்கு அனுப்பியதால் அதனை இங்கே பிரசுரிப்பது பயனுள்ளது என்று கருதியதால் அப்படியே இங்கே தருகின்றேன்.

"இயற்கை பேரழிவுக்கு எதிரான போராட்டமாக இருந்தாலும் இன விடுதலைக்கான போராட்டமாக இருந்தாலும் அது ஒரு சொகுசான சுவாத்தியமான சூழலில் நிகழ்வதில்லை. மிதவாத தலைமையில் இருந்து ஆயுதம் தாங்கிய தலைமைகள் எல்லாம் பல தியாகங்களையும் கடுமையான போராட்டங்களையும் கடந்தே வந்திருக்கின்றார்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் எதுவும் உயிருக்கு உத்தரவாதமான சூழலில் இடம்பெற்றவை இல்லை. மிதவாத அரசியல்வாதியான அமரர் அமிர்தலிங்கம், காலிமுகத்திடலில் அரசியல் காடையர்களால் கல்லடிபட்டு இரத்தம் வழிய காயத்தோடு பாராளுமன்றம் சென்று உரையாற்றினார். பல ஆண்டுகளின் பின்னர் சமாதான பேச்சுகளின்வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆட்சி மாற்றத்துக்கான அரசியலும் ஓர் இனத்தின் இருப்புக்கான அரசியலும் ஒத்தவை அல்ல என்பதை எமது சில தலைவர்கள் புரிந்து கொள்ளும் நிலைமையில் இல்லை அல்லது அவர்கள் அதனைப் புரிந்து கொள்ள விரும்பவில்லை என்று புலப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் போராட்டத்தை மலினப்படுத்துவதற்கு அதிகார வர்க்கம் ஓர் அழகான சொல்லாடலை கூறுவார்கள். அதனை ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளல் அல்லது சங்கமித்தல் என்றும் வகைப்படுத்துவார்கள்.

எமது பரப்பில் உள்ள சில தலைமைகள் தாம் ஏதோ ஆரம்பம்தொட்டே மிதவாத அரசியல்வாதிகள்போல் தம்மை எண்ணிக்கொண்டு தமக்கு வசதியான வாழ்க்கையாக தேர்தல் அரசியலை பற்றிக் கொண்டுள்ளனர். ஜனநாயக நீரோட்டம் என்ற இந்த இலகுரக அரசியல் இவர்களுக்கு இதமாகவும் வசதியாகவும் இருப்பதனால் இதனை இறுக்கமாகப் பற்றிக் கொண்டுள்ளனர். பொது வேட்பாளர் என்ற விடயத்துக்கு வீதிகளில் இறங்கி வீடு வீடாக சென்று களப்பணி ஆற்ற வேண்டியிருக்கும் - கூட்டங்கள் பலவற்றில் கலந்துகொள்ள வேண்டியிருக்கும். இதனை செய்வதற்கு பலர் தயாராக இல்லை. விழாக்களுக்கு சென்று மாலை மரியாதை பெற்று பழக்கப்பட்டுப்போன இவர்கள் களப்பணி செய்வதற்கு தயக்கப்படுகின்றனர். இவர்களோ தாம் வெற்றிபெறவேண்டும் என்றால் அதற்காக இரவு - பலாக உழைக்கத் தயாராக இருக்கின்றனர். இதனாலேயே ஒரு பெரும்பான்மை இன சிங்கள வேட்பாளருக்கு வாங்களியுங்கள் என்று சொல்வது இவர்களுக்கு மிகவும் சுலபமான விடயமாகி விடுகின்றது. வேட்டியை மடித்து கட்டிக்கொண்டு வீதிகளுக்கு இறங்க வேண்டியது இல்லை.

பல்லாயிரக்கணக்கான மக்களினதும் - போராளிகளினதும் உயிர் தியாங்களிலும் இரத்தங்களிலும் இருந்து வந்ததுதான் இந்த பாராளுமன்ற கதிரைகளும் மக்கள் பிரபலமும் என்பதனை இவர்கள் இலகுவாக மறந்து விடுகிறார்கள். பாராளுமன்ற அரசியலில் பழக்கப்பட்டுப்போன இவர்கள் போராட்டங்களில் புதிய உத்திகளையோ - கருத்துருவாக்கங்களையோ பரிசீலிக்கத் தயாராக இல்லை.

தமது சாதாரண பொது வாழ்வில் தோற்றுப்போன விஷயங்களை தொடாமல் இருக்கும் இவர்கள், தமது இனம் சார்ந்த போராட்ட வழிமுறைகளில் மாற்றி சிந்திப்பதற்கு தயாராக இல்லை. போதைப்பொருட்களிலும் சந்தைப்படுத்தும் பொருளாதாரத்திலும் திசைமாறி - சிந்தனை சிதறிப் போயிருக்கும் புதிய சந்ததிக்கு புத்துணர்ச்சி கொடுப்பதற்கு திராணியற்றவர்களாக நமது தலைமைகள் உள்ளன.

ஏனைய இனங்களைப் போல் நாமும் சகல உரிமைகளுடன் எமக்கு தேவையானவற்றை பெறும் அதிகாரம் உடையவர்களாக வாழவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே மக்கள் இவர்களை பாராளுமன்றம் அனுப்பி வைத்தார்கள். அரச உதவிகளோடு வீதிகளை போடுவதும் கோவில்களை புனரமைப்பதும் மட்டுமே உங்கள் கடமை அல்ல - உரிமைகளையும் நமது பிரதேசங்களையும் காப்பதற்கான புதிய வழிமுறைகளைக் கையாளுவதும் உங்கள் கடமைகளில் பிரதானமானதாகும். கடையைப் போட்டு உங்களை கல்லாப் பெட்டியில் உட்கார வைத்த மக்களை கந்தையாக்கி விடாதீர்கள். பொது வேட்பாளர் என்ற கோஷத்தில் மக்களைத் திரட்டி போராடும் குணத்தை பேணிச் செல்லுங்கள்."

இதுவே அந்த அர்ச்சனா எழுதியது. இதற்கு மேலும் எதைத்தான் இந்த ஊர்க்குருவியால் எழுத முடியும். நாளை சந்திப்போம்.

**ஊர்க்குருவி.**

# பொலிஸாரின் அடாவடி செயல்கள் மனித உரிமைகளுக்கு எதிரானவை

## கிழக்கு பல்கலை. சம்பவத்துக்கு யாழ். பல்கலைக்கழகம் கண்டனம்!

யாழ்ப்பாணம், மே 20

கிழக்கு பல்கலையில் பொலிஸாரின் அநாகரிக - அடா ணவடியான செயல்கள் மூலம் மனித உரிமைகளுக்கு எதிராக நினைவுகூரல் உரிமையை மறுக்கும் இலங்கை அரசின் செயலை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கிழக்கு பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு பொலிஸார் இடையூறு ஏற்படுத்தியமையை கண்டித்து யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொலிஸாரின் அடாவடியென்பது அண்மைக்காலங்களில் பெருமளவில் அதிகரித்திருப்பது இங்கே சுட்டிக்காட்டப்படவேண்டியுள்ளது. கடந்த 2023 மாவீரர் நாள் நிகழ்வுகளை பொலிஸார் குழப்பினர்.

தமிழர் தாயகத்தில் கேள்விக்குள்ளாக்கும் நினைகூரும் உரிமை தொடர்பில் கடந்த 16ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் முடிவற்றுத் தொடரும் இதுபோன்ற நினைவேந்தல்களை தடுக்கும் மற்றும் அச்சுறுத்தும் செயல்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அவதானிப்பை செலுத்தியிருந்தது.

கிழக்கு பல்கலையில் தமிழ் மாணவர்கள் தமது பெரும்பான்மையை இழந்துள்ள நிலையில், தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத்தில் எம்மோடு தோளோடுதோள் நின்று பயணிக்கும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் தொடர்ச்சியானதும் தன்னெழுச்சியானதுமான செயல்பாடுகளை தடுக்கும் செயல்பாடுகளின் அங்கமே இதுபோன்ற விதிகளுக்கு புறம்பான ஒடுக்குமுறைகளின் நோக்கமாகும்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் காத்திரமான முன்னோக்கிய பயணங்களுக்கு பிராந்தியத்தின் சிவில் சமூகங்களும் செயல்பாட்டாளர்களும் பக்கபலமாகத் திகழவேண்டும் என்பதோடு பல்கலைக்கழகத்தை சமூகத்தினுள்ளும் சமூகத்தை பல்கலைக்கழகத்தினுள் கொண்டு செல்வதுமே பொருத்தமான வழியாகும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## 'யாழ். மண்ணே வணக்கம்' செயல்திட்ட அறிமுக விழா

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண வாழ்வும் வளமும் சார்ந்த நூற்றாண்டு புலமைகளின் தேடல்களை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் "யாழ். மண்ணே வணக்கம்" செயல்திட்ட அறிமுக விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வை யாழ்ப்பாண பெட்டகம் நிழலுரு கலைக்கூடம், காவேரி கலாமன்றம் என்பன இணைந்து முன்னெடுக்கின்றன.

வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகனுக்கு "சிவத்தமிழ் ஞாயிறு" விருது, தியாகி அறக்கொடை நிறுவுநர் வாமதேவா தியாகேந்திரனுக்கு "பணிநேயப்பரிதி" விருது பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவுக்கு "பணித் திருந்தகை" விருது வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து யாழ். மண்ணே வணக்கம் பாடல் இறுவட்டு வெளியீடும் நடைபெறவுள்ளது. (ஐ)

## நுவரெலியாவில் நடமாடும் சேவை

நுவரெலியா, மே 20

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நுவரெலியாவில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமை மக்களுக்கான நடமாடும் சேவை நடைபெற்றது.

நுவரெலியாவுக்கு "மாதிரி ஸ்மார்ட் எதிர்காலம்" எனும் தொனிப்பொருளில் இந்த நடமாடு சேவை முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா மாநகர சபை பொது மைதான மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் தொழில் திணைக்களம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இலங்கை மத்திய வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம், தொழிற்பயிற்சி நிலையங்கள், தேசிய தொழில் சார் கற்கை நிறுவனம், தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் ஆகியவற்றுடன் அரச வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், அனுமதி பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், சிறு தொழில் அபிவிருத்திப் பிரிவு, பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள் என 12 சேவைகள் வழங்கப்பட்டன. (ஐ)

## டயானாவின் குற்றங்களை விசாரிப்பதற்கு பணிப்பு

### சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்தது

கொழும்பு, மே 20

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிரான குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை செய்து அவருக்கு எதிராக குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரித்தானிய பிரஜையாக இருந்த போது இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்தமை தொடர்பான வழக்குகள் மற்றும் விசாரணைகளில் கண்டு பிடிக்கப்பட்ட குற்றவியல் விடயங்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுப்பது குறித்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரியிருந்த நிலையிலேயே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கொழும்பு துறைமுகத்தில் தீ விபத்து



கொழும்பு, மே 20

கொழும்பு துறைமுக வளாகத்தை அண்மித்த அதிவேக நெடுஞ்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் தங்கியிருந்த கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் 4 தீய. ணைப்பு வாகனங்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். எனினும் தீ பரவலால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் உடனடியாகத் தெரியவரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.05.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், வைகாசி 07
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சம்பந்தன் பொது வெளியில் பேசத் தயாரா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னைநாள் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், "தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி முட்டாள் தனமான ஆலோசனை - அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள வேண்டாம்", என்று தனது கட்சியினருக்கு அறிவுறுத்தினார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், சம்பந்தன் அவ்வாறு கூறியதற்கான ஒலி அல்லது ஒளிநாடா ஆதாரங்கள் எவையுமில்லை. சம்பந்தன் அவ்வாறு தெளிவாக சொல்லக்கூடிய நிலையில் இருந்தால் அதனையிட்டு "ஈழநாடு" மகிழ்ச்சி கொள்ளும். ஏனெனில், மூத்த அரசியல்வாதி என்னும் வகையில் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து - தமிழினத்துக்கு அவர் சேவையை வழங்க வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனையாகும்.

சம்பந்தன் கூறினார் என்று வெளியிடப்பட்டிருக்கும் விடயம் ஆச்சரியமானது - அதேவேளை முக்கியமானது. அதாவது, தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட ஒஸ்லோ இணக்கப்பாட்டு பரிந்துரைகள் பலவீனமடைந்து விடுமாம். முதலில் இவ்வாறு சம்பந்தன் கூறியிருந்தால் கடந்த பதினைந்து வருட கால தமிழ்த் தேசிய அரசியலில் இது ஓர் ஆச்சரியம்தான்.

ஏனெனில், கடந்த பதினைந்து வருடங்களில் சம்பந்தன் எங்குமே இதுபற்றி பேசியதில்லை. குறித்த ஒஸ்லோ இணக்கப்பாடானது ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி தீர்வொன்றை கண்டடையும் முயற்சியில் விடுதலைப் புலிகள் இயக்கமும் அரசாங்கமும் தொடர்ந்தும் பேசுவது தொடர்பிலேயே பேசப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு இரு தரப்பும் இணங்கியதாக பொருளில்லை. ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கமோ அல்லது அரசாங்கமோ அதனை முற்றிலும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறானதோர் அடிப்படையில் பயணிக்க முடியுமா என்பதை ஆராய்வதற்கே இணங்கியிருந்தனர்.

இவை எல்லாவற்றையும் விட்டுவிடலாம். சம்பந்தன் ஒருவேளை இவ்வாறு கூறியிருப்பது உண்மையானால் அதனை சம்பந்தன் தமிழ் மக்கள் முன்னிலையில் கூறவேண்டும். அதேவேளை, ஒஸ்லோ இணக்கப்பாடு என்பது தமிழ் மக்களை ஒரு சம தரப்பாக ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் நடைபெற்ற விடயமாகும். ஒஸ்லோ இணக்கப்பாட்டின் ஆணிவேரே தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் ஒரு தரப்பு என்பதுதான். கடந்த பதினைந்து வருடங்களில் ஒரு தரப்பாக முன்னிலைப்படுத்த வேண்டிய நகர்வுகளை முன்னெடுக்காமல் அனைத்தையும் நாசமாக்கிய முட்டாள்தனத்தை செய்தவரும் சம்பந்தன்தான். இதில் சுமந்திரனுக்கும் பெரிய பங்கு உண்டு.

அவ்வாறாயின், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான சிங்கள வேட்பாளர்கள் எவராவது ஒஸ்லோவில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் - உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் - சமஷ்டி தீர்வை கண்டடைவதற்கு இலங்கை தமிழ் அரசு கட்சியுடன் பேச்சை முன்னெடுப்பதற்குத் தயாராக இருப்பதாக சிங்கள மக்களுக்கு கூறுவதுடன் - அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அது உள்வாங்கப்படுமாக இருந்தால் தமிழ் பொது வேட்பாளரை பொருத்தமற்ற நடவடிக்கை என்று சிவில் சமூகம் நிராகரிக்கலாம். அவ்வாறில்லாது விட்டால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முட்டாள்தனமானது என்று கூறுபவர்களல்லவா முட்டாள்களாக இருப்பர்? சிவில் சமூக அமைப்புகள் இதனை ஓர் அரசியல் சவாலாக முன்வைக்க வேண்டும்.

## ஊடுருவும் நீர்மூழ்கி கப்பல்களை கண்காணிக்க அமெரிக்க உதவி!

### பாதுகாப்பு ஆலோசகர் சாகல

கொழும்பு, மே 20

இலங்கை கடற்பரப்புக்குள் அனுமதியின்றி ஊடுருவும் நீர்மூழ்கி கப்பல்களை தடுக்கவும் கண்காணிக்கவும் அமெரிக்காவிடம் உதவி கோரப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஆலோசர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் துணைச் செயலாளர் டொனால்ட் லூவுடனான சந்திப்பில் இந்த உதவி கோரப்பட்டதாக சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும், இலங்கை கடற் பரப்பில் ஆய்வு நடவடிக் கைகளுக்காக விசேட உள் நாட்டு சமுத்திரவியல் ஆய் வுக்கு குழு ஒன்றை நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதோர் ஆய்வுக் குழுவை உருவாக்குவதன் மூலம் வேறு நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வரவேண்டிய தேவை ஏற்படாது.

இந்த சமுத்திரவியல் ஆய்வுக் குழுவை உருவாக்குவதற்கான பயிற்சிகள் மற்றும் இதர தேவைகளுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்குமென துணைச் செயலாளர் டொனால்ட் லூ இணக்கம் தெரிவித்தார்.

ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இலங்கையின் இந்த திட்டத்துக்கு ஒத்து ழைப்பு வழங்குவதாக ஏற்க னவே உறுதியளித்துள்ளன.

உள்நாட்டு ஆய்வுக் குழு ஊடாக பெற்றுக்கொள்ளப் படும் இந்தியப் பெருங் கடல் தரவுகளை ஏனைய நாடுகளுடன் தேவைக்கு ஏற்ப பகிர்ந்துகொள்ள முடியும் - என்றும் சாகல மேலும் கூறினார். (ஐ)

## ஈரானிய தூதுவரை தாக்கியவர் கைது!

கொழும்பு, மே 20

ஈரானிய தூதுவர் ஏ. டெல்கோஷ் தாக்கினார் என்று கூறப்படும் கொழும்பு வர்த்தகர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கொழும்பு 02, முத்தையா வீதியில் அமைந் துள்ள வர்த்தக நிலையத் தின் வாகன நிறுத்துமிடத் தில் தூதுவர் பிரவேசித்த போது, மற்றொரு காரின் சாரதியுடன் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது, குறித்த நபர் தூதுவரை தாக்கிவிட்டு தப்பிச் செல்ல முயன்றுள் ளார். தூதரகத்தினரால் அவர் பிடிக்கப்பட்ட நிலையில், அங்கு வந்த பொலி ஸார் வர்த்தகரை கைது செய்தனர். (ஐ)

## விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, மே 20

சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சைக்கிளில் பயணித்தவரை பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில், இருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், சைக்கிளில் சென்றவர் மருத்துவமனையிலேயே உயிரிழந்தார்.

களுத்துறை - பாணந்துறை - மஹாவில பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அலுபோமுல்லையை சேர்ந்த 47 வயது நபரே உயிரிழந்தார். (ஐ)

## புத்தளத்தில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின!




சிலாபம், மே 20

புத்தளத்தில் பெய்து வரும் கடும் மழையால் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால், மக்களின் இயல்புவாழ்வு பாதிக்கப்பட்டது.

புத்தளத்தில் நேற்றுமுன்தினம் இரவு முதல் பெய்து வரும் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால், கடையாக்குளம், தில்லையடி, ரத்மல்யாய, பாலாவி, குவைத் நகர் உட்பட பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததில் 150 வரையிலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. சிலர் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்தது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தினருடன் சுப விஷயங்களில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் திடீர் திருப்பம் வரும். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். அனாவசிய செலவை கட்டுப்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை, கால் வலி சோர்வு வந்து நீங்கும். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்து கொடுத்து போவது நல்லது.

**கடகம்**
உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு.

**சிம்மம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். இழுபறியாக இருந்த வேலை முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயமும் உண்டு.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

**துலாம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச்செல்லும். உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

**விருச்சிகம்**
கடந்த காலத்தின் இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வாகன வசதிப் பெருகும்.

**தனுசு**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். அவசரத்திற்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். வியாபாரத்தில் உத்தியோகத்தில் மற்ற வர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும்.

**மீனம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வாகனத்தை சரி செய்வீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும்.

# தமிழகத்தில் உணர்வெழுச்சியுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

தஞ்சாவூர், மே 20
உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் தலைமை யில் தமிழ்நாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டன.

தஞ்சாவூர் விளார் சாலையிலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (எ)



# பதவிக்காக அ. தி. மு. கவை பிரிப்பதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் ஓ. பி. எஸ்.

## உதயகுமார் கடும் சாடல்



மதுரை, மே 20
அ. தி. மு. க. பிரிவதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் ஓ. பன்னீர்செல்வம். தனக்குப் பதவி இல்லை என்பதால் அ. தி. மு. கவை பிரிக்கத் திட்டமிட்டார்- இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஆர். பி. உதயகுமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அ. தி. மு. கவை குழி தோண்டிப் புதைக்கும் நடவடிக்கையில் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் ஈடுபட்டார் என்றும் அவர் கூறினார்.

மதுரையில் நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கட்சியின் முக்கியத்துவம், நலன் கருதி ஓ. பி. எஸ். மீண்டும் அ. தி. மு.கவில் இணைக்கப்பட்டார். அ. தி. மு. கவின் முக்கிய முடிவுகளில் மறுப்புத் தெரிவிப்பார் அல்லது மௌனம் காப்பார்.

ஓ. பி. எஸ்ஸின் நடவடிக்கைகளால் அ. தி. மு. க. வளர்ச்சி அடையாமல் பின்னோக்கிச் சென்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஓ. பன்னீர் செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் தேனியில் வெற்றி பெற்றது அ. தி. மு. கவின் வெற்றியே அன்றி ஓ. பி. எஸ்ஸின் வெற்றி அல்ல. இரட்டை இலைக்கு எதிராகப் போட்டியிட்ட ஓ. பி. எஸ்ஸை எந்த வகையில் ஏற்க முடியும்?.

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்பு ஓ. பி. எஸ்ஸை அ. தி. மு. கவில் மீண்டும் இணைக்கத் திட்டம் என ஊடகங்கள் எந்தவொரு ஆதாரமும் இன்றிச் செய்தி வெளியிடுகின்றன. அ. தி. மு. கவில் மீண்டும் ஓ. பன்னீர்செல்வம் இணைய வுள்ளதாக வெளிவரும் தகவலில் உண்மையில்லை.- என்றார். (எ)

# "இலவச திட்டங்களுக்கு பா. ஜ. க. எதிரியல்ல"

கோவை, மே 20
இலவசத் திட்டங்களுக்கு பா. ஜ. க. எதிரி அல்ல என்று பா. ஜ. க. தேசிய மகளிரணி தலைவியும் தமிழக சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு, மக்களவைத் தேர்தல் பிரசாரத்தின் ஒரு பகுதியாக ஊடகங்களுடன் பிரதமர் நரேந்திர மோடி உரையாடி வருகிறார். அதில், தேர் தல் வெற்றிக்காக குடும்ப, ஊழல் கட்சிகள் ஆளும் சில மாநிலங்களில் இலவச திட்டங்களை அறிவிப்பது பற்றித் தனது கருத்துக்களை பிரதமர் பகிர்ந்து கொண்டார்.



இலவசத் திட்டங்களுக்கு பா. ஜ. க. எதிரி அல்ல. ஆனால், முழுக்க முழுக்க தேர்தல் வெற்றிக்காக, தங்களது குடும்ப ஆட்சியை தக்க வைப்ப தற்காக இலவசத் திட்டங்களை அறிவிப்பது நாட்டின் வளர்ச்சியை முடக்கி விடும். பிரதமர் மோடியும், பா. ஜ. கவும் இலவசத் திட்டங்களுக்கு எதிராக செயல்படுவதாக தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பொய்ப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறார். இதனை மக்கள் நம்பப் போவதில்லை - என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஒன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய வேண்டும்!

## பா. ம. க. மீண்டும் வலியுறுத்து

சென்னை, மே 20
இலட்சக்கணக்கில் பணத்தை இழந்தவர்க ளின் தற்கொலைகள் தொடர்வதால் ஒன்லைன் சூதாட்டத்துக்கு தமிழக அரசு முடிவு கட்ட வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

ஒன்லைன் சூதாட்ட தடை சட்டம் ரம்மி, போக்கர் போன்ற திறமை சார்ந்த விளையாட்டுகளுக்குப் பொருந்தாது என்று கடந்த ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு, கடந்த 6 மாதங்களில் ஆன்லைன் சூதாட்டத்துக்கு 9 பேர் பலியாகினர்.

ஆனால், 6 மாதங்களுக்கு மேலாகியும் உச்ச நீதிமன்றத்தில் தடை பெற தமிழக அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மக்களை காக்க வேண்டிய தமிழக அரசு, ஒன்லைன் சூதாட்ட நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாக்கத் துடிக்கிறதோ என்று சந்தேகம் எழுகிறது - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்கு செல்லாதீர்கள் மீனவர்களுக்கு எச்சரிக்கை!

## கடற்றொழில் திணைக்களம் விடுத்தது

கொழும்பு, மே 20

**மறு அறிவித்தல்வரை சிறிய படகுகளில் மீன்பிடியில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு கடற்றொழில் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.**

கடலில் ஏற்படும் காலநிலை மாற்றங்களை கருத்தில் கொண்டு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன் படி, நேற்று காலை முதலான அடுத்த 24 மணித்தியாலங்க ளில் நாட்டில் பல மாகாணங் களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில், எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு பிறகு மழையுடனான வானிலை குறையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள் ளது என்றும் எச்சரிக்கப்பட் டுள்ளது. (ஐ)

# கடும் மழை, காற்றால் ஆலயத்தின் கூரை சேதம்!

யாழ்ப்பாணம், மே 20



கடும் மழை மற்றும் காற்றால் வேலணையில் கோயில் ஒன்றின் கூரை சேதம டைந்ததாக யாழ்ப்பாணம் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் மழையுடன் கடும் காற்று வீசியது. இதன்போது, தீவகம் - வேலணையில் ஜே/21 கிராம சேவகர் பிரி விலுள்ள ஆலயம் ஒன்றே இவ்வாறு பெரும் சேதமடைந்தது.

இரவுநேரம் நடந்த இந்த சம்பவத்தால் எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நெடுந்தீவுக்கு 24 மணி நேரம் மின்சாரம் வழங்கல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 20

நெடுந்தீவு பிரதேசத்தில் தடையற்ற 24 மணிநேர மின் சார வழங்கலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் நேற்றுமுன்தினத்துடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக்கு வழங்கப் பட்ட புதிய மின்பிறப்பாக்கி நேற்று முன்தினம் முதல் சேவையில் இணைக்கப்பட் டது. இதையடுத்தே 24 மணி நேரம் மின்சாரம் வழங்கல் நெடுந்தீவில் தொடங்கப்பட் டுள்ளது.

முன்னர், மின்பிறப்பாக்கி கள் அடிக்கடி பழுதடைவ தால் நெடுந்தீவில் 24 மணி நேர மின்சாரம் வழங்கல் சாத்தியமற்றிருந்தது. இது தொடர்பில் பொதுமக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இதை யடுத்து, நெடுந்தீவுக்கு புதிய மின்பிறப்பாக்கி கொண்டு செல்லப்பட்டது.

இது நேற்று முன்தினம் பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கும் சேவையில் இணைக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



# கடற்படை அதிகாரி உட்பட 7 பேர் மன்னாரில் கைது!

கொழும்பு, மே 20

மன்னாரில் புதையல் தோண்டினர் என்ற சந்தேகத் தில் கடற்படை அதிகாரி உட் பட 7 பேர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

மன்னாளர் - பேசாலை - சிறுதோப்பு காட்டுப் பகுதியி லேயே இவர்கள் கைது செய்யப் பட்டனர்.

இராணுவ புலனாய்வு துறை யினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்ட னர்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணயளவில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர் களிடம் இருந்து புதையல் தோண்டும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டனர்.

கைதானவர்களில் ஒருவர் திருகோணமலை கடற்படை முகாமில் கடமையாற்றும் கடற்படை அதிகாரியாவார். ஏனையவர்கள் தென்னிலங் கையை சேர்ந்தவர்களாவர்.

பேசாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# மயிலணி சிவனுக்கு நாளை தேர்த் திருவிழா!

யாழ்ப்பாணம், மே 20

மயிலணி சிவன் என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா நாளை செவ் வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பெருந்திரு விழாவில் இன்று திங்கட் கிழமை மாலை 06.30 மணிய ளவில் சப்பை ரதத் திருவிழா வும் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 09 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், அன் றையதினம் மாலை 06.30 மணி யளவில் கொடியிறக்கத்திருவிழா வும் நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# வறட்சியால் வடக்கில் மட்டும் 3,050 குடும்பங்கள் பாதிப்பு

## தேசிய இடர் முகாமைத்துவ நிலையம்

கொழும்பு, மே 20

அண்மை நாட்களாக நிலவிய வறட்சியால் யாழ்ப் பாணம், கிளிநொச்சியில் 3 ஆயிரத்து 50 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதே போன்று, திருகோணமலை மாவட்டத்தில் 464 குடும்பங் கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாடு முழுவ தும் 10 ஆயிரம் வரையிலான குடும்பங்கள் வறட்சியால் பாதிப்புகளை சந்தித்தன என்று தேசிய இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள் ளது.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 618 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயி ரம் பேர் வறட்சியால் பாதிக் கப்பட்டனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 432 குடும் பங்களை சேர்ந்துள்ள 946 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத் தில் 464 குடும்பங்களை சேர்ந் துள்ள ஆயிரத்து 334 பேர் வறட் சியால் பாதிக்கப்பட்டனர்.

சப்ரகமுவ மாகாணத்தி லுள்ள கேகாலை மாவட்டத் தில் இடி மின்னல் மற்றும் மண்சரிவு உயர்காற்றழுத்தம் 83 குடும்பங்களை சேர்ந்த 381 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 8 வீடு கள் முழுமையாக சேதமடைந் தன.

அத்துடன், சப்ரகமுவ மாகாணத்தை சேர்ந்த இரத் தினபுரி மாவட்டத்தில் அதி கூடிய மழையால் ஒரு குடும் பத்தை சேர்ந்த இரண்டு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ரெலோ கட்சி பணிமனையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 20

முள்ளிவாய்க்கால் படு கொலையின் 15ஆவது ஆண்டு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) யாழ்ப்பாண மாவட்ட பணிமனையில் நடைபெற்றது.

கட்சி உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் அந்தக் கட்சி யின் யாழ். மாவட்ட அமைப்பா ளர் சபா குகதாஸ் தலைமையில் முன்னாள் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஸ் முன் னாள் யாழ்ப்பாண மாநகர பிரதி மேயர் ஈசன் உள்ளிட்டவர்கள் இதில் பங்கேற்றனர்.

முள்ளிவாய்க்கால் போர்க் களத்தில் இருந்து மீண்டு வந்த போரின் சாட்சியமான சபா குக தாஸ் நினைவுரை ஆற்றியிருந் தார். (ஐ)

# ஜனாதிபதி வடக்கு வருகை; முன்னாயத்த கூட்டம் நேற்று

யாழ்ப்பாணம், மே 20

ஜனாதிபதியின் வடக்கு வருகை தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகி யோர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

படைத் தரப்பினர், பொலிஸார், மாவட்ட அரசாங்க அதிபர்கள் உள்ளிட்ட துறைசார் அதி காரிகள் பலரும் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

ஜனாதிபதியால் வடக்கில் முன்னெடுக்கப்பட வுள்ள திட்டங்கள், திட்டங்களுக்கு பொறுப்பான துறைசார் அதிகாரிகளின் கடமைகள், பாதுகாப்பு



நடைமுறைகள், நிகழ்ச்சி நிரல் திட்டமிடல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ஐ)

# சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 20

புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் ஆலய அலங்கார திரு விழா வில் நாளை மறுதினம் தொடக்கம் ஜூன் 1ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் இரவு 7.30 மணிக்கு சிறப்பு சொற் பொழிவு நடைபெற வுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் கதிர் காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்க மைப்பில், "கருட புராணம்" என்ற தலைப்பில் இந்த சிறப்பு சொற்பொழிவு நடைபெறும்.

சொற்பொழிவை சைவப் புலவர்கள் சி. கா. கமலநாதன், செ. த. குமரன், பொன். சந்திர வேல், க. கயிலைநாதன், கு. சுமுகலிங்கம், சு. தேவமனோ கரன், திருமதி சண்முகவடிவு தில்லைமணி இளம் சைவப் புலவர்கள் ச. நவநீதன், க. கயி லைவாசன், த. மனோஜ்குமார், தில்லைமணி ஆகியோர் ஆற்று வர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர் அதிகரிப்பு; யாழில் 3,879 பேர் பாதிப்பு!

கொழும்பு, மே 20

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 23ஆயிரத்து 731 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள் பதிவான போதிலும் யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரத்து 879 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் தொடர்ச்சியாக மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளமையால் டெங்கு நோய் பரவலும் மேலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையின்படி இந்த வருடத்தில் மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 57 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 214 பேரும் களுத்துறையில் ஆயிரத்து 244 பேரும் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1 ஆயிரத்து 458 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# சுகாதார உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பு இன்று!

## புதன்கிழமை முதல் நாடளாவிய ரீதியில்

கொழும்பு, மே 20

**இன்று திங்கட்கிழமை ஊவா மாகாணத்திலும் நாளை மேல் மாகாணத்திலும் மருத்துவமனைகளில் பணிப்புறக் கணிப்பு போராட்டம் நடைபெறும். நாளை மறுதினம் முதல் நாட்டின் அனைத்து மருத்துவமனைகளிலும் பணிப்புறக்கணிப்பு நடைபெறும் என்று சுகாதார உத்தியோகத்தர்களின் தொழில்சங்கம் தெரிவித்துள்ளது.**

தமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்காததாலேயே இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக இணை அழைப்பாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாடு தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தும் 15 ஊழியர்கள் நீக்கப்பட்டமை குறித்துமே இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மன்னாரில் 150 மி.மீற்றர் மழை பதிவாக வாய்ப்பு


கொழும்பு, மே 20

மன்னார், கண்டி, நுவரெலியா, காலி மாத்தறை மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் வரும்நாட்களில் 150 மில்லிமீற்றருக்கு அதிகமான மழை கிடைக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதனிடையே, மழையுடன், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

களனி கங்கை, மகாவலி கங்கை, நில்வள கங்கை மற்றும் கிங் கங்கையை ஒட்டியுள்ள தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், தெதுரு ஓயா, மஹா ஓயா, அத்தனகல்லு ஓயா, பெந்தர கங்கை, கிரம ஓயா, உரு பொக்கு ஓயா, கலா ஓயா மற்றும் மல்வத்து ஓயா ஆகிய கரைகளை சுற்றியுள்ள தாழ்நிலங்களும் வெள்ள அபாயத்தை எதிர்கொண்டுள்ளன என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)



# சமத்துவக் கட்சி பணிமனையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

கிளிநொச்சி, மே 20

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு 2024 கிளிநொச்சியில் சமத்துவக் கட்சியின் பணிமனையில் நேற்று முன்தினம் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மயில்வாகனம் தலைமையில் நடந்த நிகழ்வில் பொதுச் சுடரேற்றப்பட்டு, தொடர்ந்து ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது.

இறுதிப் போரின்போது கொல்லப்பட்ட அனைத்து மக்களையும் நினைவு கூர்ந்து அகவணக்கமும் செலுத்தப்பட்டதோடு, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)

# போரில் உயிரிழந்த சகல மக்களையும் மூவினத்தவர்களும் நினைவேந்தினர்!




வவுனியா, மே 20

வவுனியாவில் போரால் உயிரிழந்தவர்களுக்கு மூவின மக்களும் இணைந்து அஞ்சலி நிகழ்வை நேற்று முன்தினம் நடத்தினர்.

வவுனியா நகர சபை மைதானத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வை வன்னி மக்களுக்கான ஒன்றியம், வன்னி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம், சிறந்த இலங்கைக்கான மன்றம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிள்ளைகளின் சங்கம், உலகத் தமிழர் பேரவை, தர்ம சக்தி ஒன்றியம் ஆகியன இணைந்து முன்னெடுத்தன.

கண்டிய நடனம், மேளதாள வாத்தியம் என்பவற்றுடன் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத் தலைவர்கள், அரச சார்புக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போரால் உயிரிழந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் நினைவாக தீபம் ஏற்றப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தென்னை மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# 400 கிலோ போதைப்பொருள் எரியூட்டி அழிக்கப்பட்டது!

கொழும்பு, மே 20

நாடளாவிய ரீதியில் அண்மைய காலங் களில் வழக்குகள் நிறைவடைந்த சுமார் 400 கிலோ கிராம் போதைப் பொருட்கள் நேற்று முன்தினம் பிற்பகல் எரித்து அழிக்கப்பட்டுள்ளன.



பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு சொந்தமான புத்தளம் வனாத்தவில்லு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட விசேட அடுப்பில் இந்தப் போதைப்பொருட்கள் அழிக்கப்பட்டன.

800 முதல் 1000 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் போதைப்பொருளை அழிக்க முடியுமென்றும் அதற்கு எட்டு மணி நேரமாகும் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் ஹாசிம் பயிற்சியளித்து வெடிபொருட் களை வைத்திருந்த வனாத்தவில்லுவிலுள்ள லாக் டோஸ் தோட்டக் காணியிலேயே இந்தப் போதைப்பொருள் அழிப்பு அடுப்பு அமைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வெள்ளவத்தையில் நினைவேந்தல்; பங்கேற்றவர்களில் ஒருவர் கைது

கொழும்பு, மே 20

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் கொழும்பில் நடந்தது. இதைத் தடுக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டதைத் தொடர்ந்து, ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் வெள்ளவத்தையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த அஞ்சலி நிகழ்வின் போது இராணுவத்தின் வெற்றியை கொண்டாடும் விதத்தில் ஒரு குழுவினர் நிகழ்வு ஒன்றை நினைவேந்தல் இடத்தில் சம நேரத்தில் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற மருந்து இறக்குமதி அதிகாரிகள்மீது நடவடிக்கை

## தேசிய கணக்காய்வு பணிமனை பரிந்துரை


கொழும்பு, மே 20

**மருந்துகளின் தரத்தை குறைந்தபட்ச வழியில் பரிசீலித்து அல்லது பரிசீலிக்காது இறக்குமதி செய்து நோயாளர்களை அபாய நிலைக்குத் தள்ளிய தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தில் அப்போது இருந்த தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் அவற்றை அனுமதித்த நிர்வாகக்குழு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சட்ட பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய கணக்காய்வு பணிமனை பரிந்துரைத்துள்ளது.**

சுகாதாரத்துக்கு பொருத்த மற்ற மருந்துகளை விநியோ கித்த விநியோகஸ்தர்களுக்கு எதிராகவும் சட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டும். தரமற்ற மருந்துகளை விநியோ கித்த நிறுவனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்கவும் நிதி அமைச்சுக்கு கணக்காய்வு பணி மனை பரிந்துரைத்துள்ளது.

2,199 கோடி ரூபாய்க்கு அதிக பெறுமதியான அவசர கொள்முதல்கள் மற்றும் சுமார் 2 கோடி அமெரிக்க டொலர்க ளுக்கு அதிக பெறுமதியான கொள்முதல்கள் தொடர்பில் ஒப்பந்தங்களை கடந்த மாரச் மாதம் 31ஆம் திகதி வரை பெற்றுக்ககொள்ளவில்லை என தேசிய கணக்காய்வு பணிமனை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கொள்முதல்கள் 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில் பெறப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் அவசர கொள் முதல்கள் தொடர்பில் முன் வைக்கப்பட்ட விசேட கணக் காய்வு அறிக்கையிலேயே இந்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட் டுள்ளன. குறித்த அறிக்கை அண்மையில் பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



# உலக பணக்காரர் எலானை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மே 20

இந்தோனேஷியாவின் பாலி நகரில் நடைபெறும் உலக நீர் மாநாட்டின் உயர்மட்ட கூட் டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகின் மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவ ரான எலான் மஸ்க்கை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் மீட்சி, பொரு ளாதார ஆற்றல் மற்றும் முதலீட்டுக்கான புதிய வாய்ப்பு கள் தொடர்பில் இந்த சந்திப் பின்போது உரையாடப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொழும்பில் 22 பகுதிகள் வெள்ள அபாய பிரதேசம்!

கொழும்பு, மே 20

கொழும்பு மாவட்டத்தில் 22 பகுதிகள் வெள்ள அபாய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகர சபை தெரி வித்துள்ளது.

இந்த பகுதிகளில் வடிகால் அமைப்பு முறையின்மை கார ணமாக வெள்ள அபாயம் ஏற் படலாம் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

நீர் வடிந்து செல்லும் வடி கால் அமைப்பு அபிவிருத்தி செய்யும் பணிகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# ரஷ்ய - உக்ரைன் போரில் இலங்கையர் 411 முறைப்பாடுகள் கிடைத்தனவாம்!

கொழும்பு, மே 20

ரஷ்யா - உக்ரைன் போரில் ஈடுபடுவதற்காக கூலிப்படை நிறுவனங்களால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் குடும்ப த்தினரிமிருந்து பாது காப்பு அமைச்சுக்கு 411 முறைப்பாடுகள் கிடைத் துள்ளன.

இராணுவப் பின்னணியைக் கொண்ட இலங்கையர்களே ரஷ்யா - உக்ரைன் போருக்காக கடத்தப்படுகின்றனர்.

இது தொடர்பான விசா ரணை இந்த மாதத் தொடக்கத் தில் ஆரம்ப மானது.

உக்ரைனில் ரஷ்யாவுக்காக போரிடும் இலங்கையர்களை இனங்கண்டு அவர்களை மீண் டும் இலங்கை அழைத்துவர நடவடிக்கை எடுத்துவரப்பட் டுள்ளதாகவும் அமைச்சு தெரி வித்துள்ளது. (ஐ)

# ஆற்றில் குதித்த பெண்ணை காப்பாற்றினார் இளைஞர்!

கொழும்பு, மே 20

கொழும்பு - கலவானை பகு தியில் ஆற்றில் குதித்த பெண் ஒருவரை அந்த பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் ஆற்றில் குதித்து உயிரை காப்பாற்றினர் என்று கலவானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுமி கலவானை பகுதியை சேர்ந்தவர் என்பது டன் இந்த பெண் ஆற்றில் குதித் துத் தற்கொலைக்கு முயன்றார் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

கலவான - மத்துகம பிரதான வீதியில் அமைந்துள்ள பாலத் திலிருந்து இந்த பெண் குதித்த தைக் கண்ட இளைஞன் அவரு டைய உயிரையும் பொருட் படுத்தாமல் ஆற்றில் குதித்து பெண்ணை காப்பாற்றியுள்ளார்.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதுடன் விசாரணைகளுக்காக பெண் கலவானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவிலிருந்து இலங்கை வரும் சுற்றுலாவிகள் உயர்வு

கொழும்பு, மே 20

இந்தியாவில் இருந்து வருகைதரும் சுற்றுலா பயணி களின் எண்ணிக்கை தொடர்ந் தும் அதிகரித்து வருகின்றனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் வாராந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தின் முதல் 16 நாட்களில் 61 ஆயிரத்து 735 சுற்றுலாப் பயணிகள் இலங் கைக்கு வருகை தந்துள்ளனர். இதில், இந்தியாவிலிருந்து 14 ஆயிரத்து 430 சுற்றுலா பய ணிகள் வருகை தந்துள்ளனர் அத்துடன், மாலைதீவிலி ருந்து 6 ஆயிரத்து 129 பேரும், ஜேர்மனியில் இருந்து 5 ஆயி ரத்து 144 பேரும், பிரித்தானி யாவில் இருந்து 4 ஆயிரத்து 110 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# தான சாலைகள் சோதிக்கப்படும்!

கொழும்பு, மே 20

வெசாக் தினத்தை முன் னிட்டு தன்சல்களில் வழங்கப் படும் உணவுகள் உண்பதற்குத் தகுதியற்றதாக இருப்பின், உடனடியாக அருகில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகரிடம் தெரிவிக்கு மாறு சுகாதார அமைச்சின் உணவுப் பாதுகாப்பு பிரிவு பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

வெசாக் காலத்தில் நடத்தப் படும் தான சாலைகள் பொது சுகாதார பரிசோதகரால் தொடர்ந்து பரிசோதிக்கப் பட்டு வருகின்றன. அப்படி இருந்தும் சில தான சாலைகள் உரிய தரத்தில் பராமரிக்கப்படு வதில்லை என பொது சுகாதார பரிசோதகர்கள் குற்றம் சாட்டி யுள்ளனர்.

எவ்வாறாயினும், கடந்த வருடத்தைவிட இவ்வருடம் கூடுதலான தான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதே வேளை, தான சாலைகளை நடத்துவோர் மூன்று நாட்க ளுக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ஐ)

# 1,509 இராணுவத்தினருக்கு நேற்று முதல் பதவி உயர்வு

கொழும்பு, மே 20

15ஆவது போர் வெற்றி தினத்தில் 1,509 இராணுவத்தின ரின் பதவி நிலை உயர்த்தப்பட் டுள்ளது. ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இந்த தர உயர்வுகள் வழங்கப்பட்டுள் ளன.

இதன்படி, இலங்கை இரா ணுவத்தின் வழமையான மற்றும் தொண்டர் படையணி யின் 114 அதிகாரிகள் மற்றும் 1,395 இதர நிலை சிப்பாய்கள் அடுத்த தரத்துக்கு உயர்வு பெற் றுள்ளனர்.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து படைப் பிரிவு உறுப்பினர்களுக் கும் இந்தப் பதவி உயர்வு வழங் கப்பட்டுள்ளது. (ஐ)

# கடவுச்சீட்டை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார் டயானா கமகே

கொழும்பு, மே 20

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தனது கடவுச்சீட்டை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்துள் ளார்.

நீதிமன்றம் வழங்கிய உத்தர வுக்கு அமைய அவர், தனது கடவுச்சீட்டை நேற்று முன் தினம் அதிகாரிகளிடம் ஒப்ப டைத்தார்.

டயானா கமகே இலங்கை யின் குடியுரிமை பெற்றவர் அல்ல எனவும் அவர் பாராளு மன்ற உறுப்பினர் பதவியை வகிக்க சட்டப்பூர்வமாக தகுதி யற்றவர் எனவும் உயர் நீதிமன் றத்தின் மூன்று நீதியரசர்களை கொண்ட அமர்வு தீர்ப்பளித் தது.



இதற்கமைய, அவர் பாரா ளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தடை விதித்து நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றால் டயானா கமகேவுக்கு வெளி நாடு செல்வதற்கு தடை விதித்து கடந்த மே மாதம் 9ஆம் திகதி உத்தரவிடப்பட்டி ருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரயிலில் மாணவிக்கு தொல்லை; ஆறு இளைஞர்கள் கைதாகினர்!

நுவரெலியா, மே 20

பல்கலைக்கழக மாணவிக்கு ரயிலில் பாலியல் தொல்லை கொடுத்த 6 இளைஞர்ளை ஹற் றன் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

கொழும்பு கோட்டையிலி ருந்து பதுளை நோக்கி பய ணித்த ரயிலிலேயே நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரயிலில் தன்னிடம் அத்து மீறிய 6 இளைஞர்கள் தொடர் பில் பாதிக்கப்பட்ட மாணவி தனது பெற்றோருக்கு தொலை பேசி மூலம் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் ஹற்றன் பொலி ஸாரிடம் தெரிவித்தனர்.

ஹற்றன் ரயில் நிலையத்துக்கு வந்த பொலிஸார் 6 இளைஞர் களையும் கைது செய்தனர்.

கைதான 6 இளைஞர்களும் கொழும்பை சேர்ந்த 20 - 30 வய துடையவர்களாவர். இவர்கள் சிவனொளிபாத மலைக்கு யாத் திரை செல்வதற்காக சென்றிருந் தனர் என்று பொலிஸாரின் விசா ரணையில் தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் ஓர் அங்குலம்கூட நாங்கள் விட்டுத்தர மாட்டோம்!

## இலங்கை தமிழ் அரசுக் கட்சி



கல்முனை, மே 20

கல்முனையை நான்காக அல்ல நாற்பத்தியெட்டாக பிரித்தாலும்கூட ஓர் அங்குலம் நிலத்தைக்கூட விட்டுத்தர மாட்டோம். கல்முனை தமிழ் மக்களின் பூமி - இவ்வாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான க. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். ஹரீஸின் கருத்து ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனங்களை வேதனைப்படுத்துவதாக இருக்கிறது. குறிப்பாக, 56ஆவது நாளாகவும் வெயிலிலும் மழையிலும் போராடும் கல்முனை மக்களை புண்படுத்துவதாக இது உள்ளது.

இந்தப் போராட்டத்தின் பின்னால் அரசியல் பின்னணி இருப்பதாக கூறுகின்றார். இது அப்பட்டமான பொய். உணர்வுள்ள அனைத்து மக்களும் இணைந்து நிர்வாக அதிகார பயங்கரவாதத்துக்கு எதிராக போராட்டத்தை நடத்துகின்றனர்.

கல்முனையை நான்காக அல்ல, நாற்பத்தியெட்டாகப் பிரிக்கட்டும். எத்தனை பிரிப்பு வந்தாலும் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் 29 கிராம சேவையாளர் பிரிவில் ஓர் அங்குலம் நிலத்தைக்கூட விட்டுத் தரமாட்டோம். ஏனெனில், கல்முனை தமிழரின் நிலம். கல்முனை நகரம் தொண்ணூறு வீதம் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற தமிழர் நிலம். அதை துண்டாடி பிரித்து கையாள்வதற்கான சதித் திட்டமே இதுவாகும்.

இதே செயல்பாட்டில் முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா ஈடுபட்டிருந்தார். இப்பொழுது இவர் ஈடுபடுகின்றார் - என்றார். (ஐ)




# கிழக்கு ஆளுநர் தலைமையில் பல்வேறு உதவித் திட்டங்கள்!

திருகோணமலை, மே 20

திருகோணமலையில் நேற்று ஆளுநர் செந்தில் தொண்டமான் நிகழ்வில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை துறைமுக உள்ளக வீதியில் புதிய நடைபாதை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அத்துடன், பண உதவி தேவைப்படும் நோயாளர்களுக்கு உதவிகளும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி நூல்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், நூலகங்களுக்கு நூல்கள் வழங்கல், மாற்று ஆற்றலுடையோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கல், உள்ளூராட்சி சபைகளுக்கு உழவு இயந்திரங்கள் வழங்குதல் போன்றவையும் நடைபெற்றன. (எ)



# வேம்பிலிருந்து வடிகிறது பால்!

அக்கரைப்பற்று, மே 20

அக்கரைப்பற்றில் வேப்ப மரத்திலிருந்து ஒரு வார காலமாக பால் வடிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

241ஆம் படைப்பிரிவின் சிற்றுண்டி சாலை முன்பாக உள்ள வேப்பம் மரத்திலிருந்தே இவ்வாறு பால் வடிகின்றது.

ஆரம்பத்தில் சிறிதாக வெளியேறிய இந்தப் பால் தற்போது அதிகளவில் வருகிறது. இந்தப் பால் இனிப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது கண்ணகை அம்மன் ஆலயங்களில் திருக்குளிர்த்தி உற்சவங்கள் நடந்து வரும் இந்த சமயத்தில் இது போன்று சில சம்பவங்கள் நடப்பது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# காத்தான்குடி ஜும் ஆப் பள்ளியில் அன்னதானம்!


காத்தான்குடி, மே 20

காத்தான்குடி 5 பத்ரியா ஜும்ஆப் பள்ளிவாசலில் இரு பதாயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நேற்று ஆரம்பமானது.

பள்ளிவாசலின் 38ஆவது வருடமாக நடத்தப்படும் ஹாஜாஜி கந்தூரியையொட்டி இந்த அன்னதான நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். (ஐ)

# காரைதீவு கண்ணகை பொங்கலுக்கு மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வு இன்று!



காரைதீவு, மே 20

கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்ச்சி சடங்கின் பாரம்பரிய வைகாசி பொங்கலுக்கான மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஆலயத்தில் பாரம்பரிய உரலில் நெல் குற்றும் சடங்கும் நடைபெறும். இதில், ஏராளமான மக்கள் பங்கேற்பர்.

முன்னதாக, கடந்த ஐந்து தினங்களாக விடேச பூசைகள் நடைபெற்று ஊர்சுற்று காவியம் பாடல் நடைபெற்றது.

நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்த்தி சடங்கு நடைபெறும். எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு எட்டாம் சடங்கு நடைபெறும். (ஐ)

# கல்முனையை நான்காக உடைப்பதற்கு நாம் தயார்

## சொல்கின்றது முஸ்லிம் காங்கிரஸ்

கல்முனை, மே 20



கல்முனையில் இயங்கும் தமிழ் மக்களுக்கான உப பிரதேச செயலகத்தை மூட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நானில்லை. கல்முனையை நான்காக உடைத்து அவர்களுக்கு தனிப் பிரதேச செயலகம் வழங்குவதற்கும் நான் தயாராக உள்ளேன் - இவ்வாறு திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும், எந்தவொரு நாட்டுத் தலைமையும் தனது நாடு துண்டாடப்படுவதை விரும்பாது. இலங்கையிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிந்து போவதை இந்நாட்டு மக்கள் விரும்பவில்லை. கொழும்பில் தமக்கென தனியான பிரதேச செயலகத்தை தமிழர்கள் கோரவில்லை. ஆனால், கல்முனையில் தனிச் செயலகம் கோரி போராட்டங்கள் நடக்கின்றன.

போர் காலத்தில் சூழ்ச்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த உப செயலகத்தை தற்போது மூடவேண்டும் என்று தீவிரபோக்குடைய சில முஸ்லிம்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதேபோன்று, இந்த உபபிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று சில தமிழர்களே கோரி வருகின்றனர். இதனால் இங்கு தமிழ்- முஸ்லிம் ஐக்கியம் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

என்னைப் பொறுத்தளவில் கல்முனை உப செயலகம் மூடப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு கிடையாது. கல்முனையை நான்காக உடைப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். கல்முனையின் அரசியல் தலைமையாக பொறுப்புடன் இதனைக் கூறுகின்றேன்.

இதன் மூலம் சாய்ந்தமருது, மருதமுனை மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தனித்தனியான அலகுகள் உருவாக்கப்படும். இதன்போது தமிழர்களுக்கான செயலகம் தெளிவான எல்லைகளுடன் நிலத் தொடர்புடையதாக அமைக்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். இவ்வாறான தீர்வுக்கு சம்பந்தன் ஐயா உள்ளிட்ட தமிழ் தலைமைகள் தயாரா என்று கேட்க விரும்புகின்றேன் - என்று கூறினார். (ஐ)

# சாம் தம்பிமுத்து தம்பதியரின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல்

மட்டக்களப்பு, மே 20

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்து மற்றும் அவரின் மனைவி கலாமாணிக்கம் ஆகியோரின் நினைவுதினம் நடைபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு வில்லியம் ஓல்ட் மண்டபத்தில் இந்த நினைவேந்தல் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், சீனித்தம்பி யோகேஸ்வரன், அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம், இ. பிரசன்னா என அரசியல் பிரமுகர்கள் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவராக சாம் தம்பிமுத்துவின் மகன் அருண் தம்பிமுத்து தெரிவான பின்னர் நடந்த முதல் நினைவேந்தல் இதுவாகும்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சாம் தம்பிமுத்துவும் அவரின் மனைவியும் 1990 மே 7ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் கனடா தூதரகம் முன்பாக சுடப்பட்டனர். இதில், சாம் தம்பிமுத்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த அவரின் மனைவி 1990 மே 16ஆம் திகதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானை மீள புரட்டிப்போட்ட வெள்ளம்

## 50 பேர் பலி! பலர் மாயம்




காபூல், மே 20

ஆப்கானிஸ்தானில் மீண்டும் திடீரென கொட்டித்தீர்த்த மழையால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் சிக்கி 50 பேர் உயிரிழந்தனர். மேலும் பலரைக் காணவில்லை என்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்ற அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கு ஆப்கானிஸ்தானிலுள்ள கோர் மாகாணத்திலேயே இவ்வாறு பேரிடர் ஏற்பட்டுள்ளது.

கோர் மாகாணத்தின் தலைநகரான பெரோஸ் கோ உட்பட மாகாணத்தின் பல பகுதிகளிலும் பருவ மழை கொட்டித் தீர்த்தது. வெள்ளத்தில் மூழ்கிய ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன.

இதேவேளை, இம்மாதம் 10 ஆம் திகதி பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி வடக்கு மாகாணமான பாக்லானில் 300இற்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்று கடந்த வாரம் ஐ. நா. அறிக்கை வெளியிட்டது. இந்த நிலையில் நேற்று மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு உயிரிழப்புக்கள் நிகழ்ந்தமை ஆப்கானிஸ்தானில் சோகத்தை அதிகரித்துள்ளது. (எ)



# கிர்கிஸ்தானில் கலவரம்

கிர்கிஸ்தான், மே 20

கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கேக்கில் வெடித்த கலவரத்தையடுத்து அங்குள்ள மருத்துவக் கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவர்களைப் பாதுகாப்பாக இருக்கும்படி இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் அரசாங்கங்கள் அறிவுறுத்தியுள்ளன.

கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கேக்கில் சர்வதேச மாணவர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது. இதனாலேயே இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் தத்தம் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளன.

கடந்த 13 ஆம் திகதி கிர்கிஸ்தான் - எகிப்து மாணவர்கள் இடையேயான மோதல் தொடர்பான வீடியோ வைரலான நிலையில் கிர்கிஸ்தான் மாணவர்கள் வெளிநாட்டு மாணவர்களைத் தேடித்தேடி தாக்கும் சூழல் நிலவுவதாக உள்ளூர் ஊடகங்கள் அதிர்ச்சி செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

# சிங்கப்பூரில் 25,900 பேருக்கு கோவிட் - 19 தொற்று பாதிப்பு

## முகக்கவசம் அணிய அறிவுறுத்தல்

கோலாலம்பூர், மே 20

சிங்கப்பூரில் தற்போது மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருகிறது. கடந்த 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து 25 ஆயிரத்து 900 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத் துறை தகவல் வெளியிட்டுள்ளது. நாளுக்கு நாள் தொற்று அதிகரித்து வருவதால் சிங்கப் பூர் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட கோவிட் வைரஸ் பின்னர் உலகம் முழுவதும் பரவியது. இதனால் உலக நாடுகள் பலவும் பெரும் பாதிப்பை சந்தித்தன. தற்போது பல நாடுகளில் இயல்புநிலை திரும்பிய நிலையில் சிங்கப்பூரில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இது தொடர்பில் சிங்கப்பூர் சுகாதார அமைச்சர் தெரிவித்ததாக ஸ்ட்ரெய்ட்ஸ் ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. அதில், "நாட்டில் கொரோனா புதிய அலை வேகமெடுக்கத் தொடங்கியுள்ளது. தொற்று பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதைப் பார்க்க முடிகிறது. இந்த அலை அடுத்த 2 முதல் 4 வாரங்களில் ஜூன் இறுதியை ஒட்டி உச்சத்தைத் தொட வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இப்போது நாம் புதிய அலையின் தொடக்கத்தில் இருக்கிறோம்.

வரவிருக்கும் விடயங்களுக்கு சுகாதார அமைப்பு நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கொரோனா பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் முகக்கவசம் அணிய வேண்டும்"- என்றார். (எ)

# போர்த்துக்கல் வான்பரப்பில் ஒளிர்ந்த நீலநிற விண்கற்கள்

வாஷிங்டன், மே 20

நிலவு, நட்சத்திர ஒளிகள், தெருவிளக்கு வெளிச்சம் என இருக்கும் இரவு வானம் திடீரென நீலநிற ஒளியுடன் மிளிர்ந்தால் எப்படி இருக்கும்? அப்படி ஒரு ஆச்சரிய அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள் போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின் மக்கள். இவ்விரு நாட்டு மக்களும் சனிக்கிழமை இரவு வானத்தில் திடீரெனத் தோன்றிய விண்கல், வான்பரப்பை நீல நிறத்தில் ஒளிரச்செய்த ஒரு கண்கவர் காட்சிக்கு சாட்சிகளாகி இருக்கின்றனர்.

திகைப்பூட்டும் இந்தக் காட்சியைக் கண்ட மக்கள் அதனைத் தங்களின் தொலைபேசிகளில் பதிவு செய்து சமூக ஊடங்களில் வைரலாக்கி வருகின்றனர். அப்படியான வீடியோ ஒன்றைப் பகிர்ந்துள்ள காலின் ரக் என்ற எக்ஸ் பயனர், தனது எக்ஸ் பக்கத்தில், "ஸ்பெயின், போர்த்துக்கல் வான்பரப்பில் விண்கற்கள் தெரிந்தன. நீல ஒளிகள் பல நூறு கிலோ மீற்றர்களுக்கு இரவு வானத்தை ஒளிரச் செய்தன.

என்றாலும் இப்போது வரை அது பூமியின் எந்தப் பரப்பில் விழுந்தது என்று உறுதிப்படுத்தப்படவில்லை. காஸ்ட்ரோ டெயர் நகருக்கு அருகே அது விழுந்திருக்கலாம் என்று சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன" என்று குறிப்பிட்டுள்ளார்.



காலின் ரக்கின் பதிவு அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. அதற்கு பலர் எதிர்வினையாற்றியுள்ளனர். பயனர் ஒருவர் "மிகவும் சிலிர்ப்பூட்டக்கூடியது. இந்த சம்பவத்தில் யாரும் காயமடையவில்லை என்று நம்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார். மற்றொரு பயனர், "இது முற்றிலும் அதிர்ச்சியூட்டும் சம்பவம்" என்றும், மற்றொருவர், "வாழ்வில் ஒரே முறை நிகழும் நிகழ்வு" என்றும் தெரிவித்துள்ளனர்.

நாசாவின் கூற்றுபடி, "விண்ணில் உள்ள கற்கள் பூமியின் வளிமண்டலத்துக்குள் வேகமாக நுழைந்து எரியும் அந்த நெருப்புக்கோளம் அல்லது எரிநட்சத்திரம் விண்கற்கள்" என்று அழைக்கப்படுகின்றன. விண்வெளி பாறைகள், பெரிய அளவிலான தூசுகள், சிறுகற்கள் போன்றவை எரியும் போது இவ்வாறு ஒளி உண்டாகிறது என்று தெரிவித்துள்ளது. (எ)

# சென்னையிலிருந்து இஸ்ரேல் சென்ற ஆயுதக் கப்பலுக்கு அனுமதி மறுப்பு!

மட்ரிட், மே 20

இந்தியாவின் சென்னையிலிருந்து இஸ்ரேலுக்குச் சென்ற ஆயுதக் கப்பல், ஸ்பெயின் துறைமுகத்தில் தரித்து செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் 27 தொன் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதாக தகவல் வெளியானது.

டென்மார்க்கைச் சேர்ந்த சரக்குக் கப்பல் மரியான் டேனிகா. இந்தக் கப்பல் சென்னையிலிருந்து கடந்த மாதம் 8 ஆம் திகதி புறப்பட்டு இஸ்ரேலின் ஹைபா துறைமுகத்தை நோக்கிச் சென்றது. இந்தக் கப்பலில் சித்தார்த்தா லாஜிஸ்டிக்ஸ் என்ற நிறுவனம் கன்டெய்னர்களை அனுப்பியுள்ளது. அந்த கன்டெய்னர்களை இஸ்ரேல் கார்கோ லாஜிஸ்டிக்ஸ் (ஐ. சி. எல்) நிறுவனம் பெறுகிறது.

செங்கடல் வழியாக இஸ்ரேலுக்குச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது ஹவுதி தீவிரவாதிகள் ட்ரோன் மற்றும் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்துகின்றனர். இதனால் இந்தக் கப்பல் ஆபிரிக்க நாடுகளைச் சுற்றிக் கொண்டு ஸ்பெயின் வழியாக இஸ்ரேல் செல்கிறது. தற்போது இந்தக் கப்பல் மொராக்கோவிலிருந்து ஸ்பெயின் நோக்கிச் செல்கிறது. வழியில் அந்தக் கப்பல் ஸ்பெயினின் கர்டஜெனா துறைமுகத்தில் நாளை 21 ஆம் திகதி நின்று செல்ல அனுமதி கோரியது.

இந்த நிலையில், ஆன்டிகா மற்றும் பர்புடா நாட்டைச் சேர்ந்த 'போர்கம்' என்ற சரக்குக் கப்பல் ஸ்பெயின் துறைமுகத்தில் தரித்து செல்ல ஏற்கனவே அனுமதி கோரியிருந்தது. அந்தக் கப்பலில் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுவதால், அந்தக்



கப்பலை ஸ்பெயின் துறைமுகத்தில் நுழைய அனுமதிக்கக் கூடாது என ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான் செஸ்ஸை, கூட்டணி கட்சியான சுமர் என்ற இடதுசாரிக் கட்சி வலியுறுத்தியது. ஆனால், அந்தக் கப்பல் இஸ்ரேலுக்குச் செல்லவில்லை என்பதும், செக் குடியரசு நாட்டுக்கு இராணுவத் தளபாட பொருட்களைக் கொண்டு செல்கிறது என்றும் தெரியவந்தது.

இந்த நிலையில் தான் மரியான் டேனிகா, ஸ்பெயின் துறைமுகத்தில் தரித்து செல்ல அனுமதி கோரியது. அந்தக் கப்பலில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் இருப்பதைக் கண்டறிந்த ஸ்பெயின், அந்தக் கப்பல் தங்கள் நாட்டு துறைமுகத்தில் தரித்து செல்ல அனுமதி மறுத்துவிட்டது.

இதுகுறித்து ஸ்பெயின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோஸ் மேனுவல் அப்பேர்ஸ் கூறுகையில் "இஸ்ரேல் செல்லும் ஆயுதக் கப்பல் ஸ்பெயினில் தங்கிச் செல்ல அனுமதி மறுப்பது இதுவே முதன் முறை. இது எங்கள் நாட்டின் உறுதியான கொள்கையாக இருக்கும். மத்திய கிழக்கு பகுதிக்கு மேலும் ஆயுதங்கள் தேவையில்லை. அங்கு அமைதிதான் வேண்டும்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தைக் கொன்று நகை, பணம் கொள்ளை!

## கம்பஹாவில் அதிர்ச்சி சம்பவம்

கொழும்பு, மே 20

**ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தை, தாய், மகன் ஆகியோரைக் கொன்று நகைகள், பணத்தை கொள்ளையிட்டார் என்று சந்தேகிக்கப்படும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

கம்பஹா - மீரிகம - மாலதெனிய பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிளில் பயணித்த ஒருவரை பொலிஸார் சோதனையிட்டபோது அவரிடம் இருந்து 3 இலட்சம் ரூபாய் மற்றும் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

அவரிடம் நடத்திய விசாரணையில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தேகநபர் தனது மாமன், மாமி; மற்றும் மைத்துனர் ஆகியோரை கொன்றே அவர் இந்தக் கொள்ளை சம்பவத்தை நிகழ்த்தியுள்ளார்.

சம்பவத்தில் 80 வயதான தந்தை, 77 வயதான தாய், 42 வயதான மகன் ஆகியோரே கொல்லப்பட்டனர். கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சிறுவன்மீது பொலிஸார் தாக்குதல்!

கொழும்பு, மே 20

13 வயது பாடசாலை மாணவன் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் குருநாகல் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வருகின்றார்.

இந்த நிலையிலேயே தன்னை பொலிஸார் தாக்கினர் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏயர் ரைபிள் மற்றும் கைபேசியை திருடியதாகக் கூறியே பொலிஸார் தாக்கினர் என்றும் சிறுவன் தெரிவித்துள்ளார். (ஐ)

# அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மின் கட்டணத்தை குறைக்கலாம்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, மே 20

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மின்சாரகட்டணங்களை குறைக்க முடியும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கொலன்னாவை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உமா ஓயா மின்னுற்பத்தி திட்டத்தின் மூலம் தேசிய மின் கட்டமைப்புக்கு 120 மெகாவாட் மேலதிக மின்சாரம் கிடைக்கின்றமை கட்டணக் குறைப்பு



விடயத்தில் நேரடி தாக்கம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய, மின் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பிரதமர் தெரிவித்துள்ளார். (ஐ)

# தகவல் தொழில்நுட்ப பாடம் கற்கும் 5,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்!

கொழும்பு, மே 20

2022/2023ஆம் ஆண்டுக்கான சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து 2024/2025 உயர்தரப் பரீட்சைக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு 5 ஆயிரம் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு ஜனாதிபதி நிதியம் மற்றும் இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக் குழு திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைவாக நடை முறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் புலமைப்பரிசில் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாத வருமானம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த அசர பாடசாலையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடத்துடன் உயர் கல்வி கற்கும் மாணவர்கள், தாங்கள் படிக்கும் பாடசாலை மூலம் மே 22 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம். குறைந்த பட்சம் ஒவ்வொரு கல்வி வலயங்களிலிருந்தும் 50 பேர் தெரிவாவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கையை முன்னோக்கி செலுத்தும் சவாலுக்கு தயார்

## சரத் பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு, மே 20

இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு எந்த சவாலையும் எதிர்கொள்ள தான்தயார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.


தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தை வழிநடத்தி 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இலங்கையில் ஒற்றுமை தொடரும் என்று தனது எக்ஸ் தள பதவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று தசாப்த கால மோதலின் பின்னர், இலங்கை விடுவிக்கப்பட்டு, மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டு ஒன்றரை தசாப்தம் கடந்துவிட்டது. போரில் ஏராளமானோர் உயிரிழந்தும் - பெரும்பாலானோர் கை, கால்களையும் இழந்தனர். போர் இனி மையானது அல்ல. எனவே சமாதானத்துக்கும் விலை உண்டு" என்று பொன் சேகா கூறியுள்ளார்.

இந்நிலையில், அடுத்த பரம்பரைக்கு போரை கொண்டு செல்ல மாட்டேன் என்று, தாம் உறுதியளித்தப்படி, முப்படை



யினர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் ஆதரவுடன் எனதுவார்த்தையை நிறைவேற்றினேன் என்றும் அவர் அந்தப் பதிவில் கூறியுள்ளார். (ஐ)



சட்டவிரோத மணல் அகழ்வுக்கு பயன்படும்

# மணல் அள்ளும் இயந்திரம் பொலிஸாரிடம் சிக்கியது!

நுவரெலியா, மே 20

இரத்தினக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் மணல் அள்ளும் இயந்திரம் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொகவந்தலாவை காட்டுப் பகுதியில் காசல்ரீ நீர்த்தேகத்தின் நீர் பாயும் பகுதிக்கு அண்மையாக சட்டவிரோத இரத்திக்கல் அகழ்வில் சிலர் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அந்தப் பகுதியை முற்றுகையிட்டனர்.

இதன்போது, அங்கிருந்தவர்கள் தப்பியோடினர். இதன்போது, ஜூஸர் சாண்டர் என்னும் மணல் அள்ளும் இயந்திரத்தை பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த இயந்திரத்தின் பெறுமதி சுமார் 25 இலட்சம் ரூபாயாகும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# எங்கள் அரசாங்கத்தில் ஹர்சவே நிதியமைச்சர்!

## அறிவித்தார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மே 20

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் நிதி அமைச்சராக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வாவே நியமிக்கப்படுவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

காலியில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

முன்னதாக ஹர்ச டி சில்வா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி



பிரதி அமைச்சராக பதவி வகித்துள்ளார். இதன்போது நிதியமைச்சராக இருந்த மங்கள சமரவீரவின் திட்டங்களுக்கு ஹர்ச டி சில்வா பெரிதும் துணையாக செயல்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சாதிக்காய் விலை வீழ்ச்சி; விவசாயிகளுக்கு பாதிப்பு

கண்டி, மே 20

இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தரும் முக்கிய ஏற்றுமதி விவசாய உற்பத்தியான சாதிக்காயின் விலை பெருவீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், தாம் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

ஏற்றுமதி விவசாய திணைக்கள தரவுகளின்படி 2022ஆம் ஆண்டு நாட்டில் 2,936 ஹெக்ரெயர் பரப்பில் சாதிக்காய் உற்பத்தி செய்யப்பட்டு 476.06 மெற்றிக் தொன் கிடைத்தது. இதனை ஏற்றுமதி செய்ததன் மூலம் 2022இல் பெறப்பட்டுள்ள வெளிநாட்டு செலாவணி 797.18 மில்லியன் ரூபாயாகும்.

இருந்தபோதும் சில மாதங்களுக்கு முன் 1,300 ரூபாய்க்கு



விற்பனையான ஒரு கிலோ சாதிக்காயின் விலை தற்போது 700 ரூபாயாக குறைந்துள்ளது. இதேநேரம், உற்பத்திக்கான செலவுகள் அதிகரித்துள்ளன. இதனால், தாம் பெரிதும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன், அரசாங்கம் தமது விடயத்தில் அக்கறை செலுத்தி சலுகைகளை தர வேண்டும் என்று சாதிக்காய் உற்பத்தியாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

அவகாசத்தை அவர் கோரியிருந்தார்.

இதைத் தொடர்ந்து தமிழ் பொது வேட்பாளர் மற்றும் கட்சியின் வழக்கு தொடர்பான விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக கட்சியின் மத்திய குழுவை நேற்றைய தினம் கூட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன ஆதரவு தெரிவித்துள்ளன. தமிழ் அரசு கட்சியின் முக்கியஸ்தர்கள் இரு வேறுபட்ட கருத்துகளை கொண்டுள்ளனர். இந்த நிலையிலேயே தமிழ் அரசுக் கட்சியிடம் தமிழ் சிவில் அமைப்புக்கள் ஆதரவைக் கோரியிருந்தன என்பதையும் நினைவில்கொள்ளத்தக்கது. (ஐ)

## ஒக்.5...

தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு கலந்துரையாடியதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம், சட்டப்படி எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதிக்கு பிறகு வேட்பு மனு தாக்கல் திகதியை அறிவிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. அறிவிப்பு வெளியான 16 முதல் 21 நாட்களுக்குள் வேட்புமனுக்கள் பெறப்பட வேண்டும். விதிகளின் கீழ், பிரசாரத்துக்கு குறைந்தபட்சம் 28 நாட்களும் அதிகபட்சமாக 42 நாட்களும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாயை கோரியுள்ளதாகவும் தேவைக்கு ஏற்ப - தேவைப்படும் அடிப்படையில் நிதி பெறப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## இலங்கையில்...

அர்த்தமற்ற நீண்டகால வன்முறை ஏற்படுத்திய வேதனை - வலியுடன் வாழும் அவர்களின் அன்புக்கு உரியவர்களை நாங்கள் கௌரவிக்கின்றோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் மே 18ஆம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினமாக அங்கீகரிப்பதற்கான தீர்மானத்துக்கு கனடா பாராளுமன்றம் ஏகமனதாக வாக்களித்தது. மோதல்களின்போது இடம்பெற்ற குற்றங்களுக்காகவும் இலங்கையின் அனைத்து மக்களும் எதிர்கொள்ளும் துயரங்களுக்காகவும் நாங்கள் எப்போதும் நீதியையும் - பொறுப்புக்கூறலையும் விதந்துரைக் கிறோம்.

2023இல் இலங்கையின் ஆயுத மோதலின் போது மனித உரிமைகளை மீறிய இலங்கை இராணுவ அதிகாரிகள் நால்வருக்கு எதிராக நாங்கள் தடைகளை விதித்தோம். இலங்கையில் மனித உரிமைகளை கனடா வலுவான விதத்தில் பாதுகாக்க முயல்கின்றது.

2022 ஒக்ரோபரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமை யாக நிறைவேற்றும் நடவடிக்கைகளில் எங்கள் சர்வதேச சகாக்களுடன் இணைந்து ஈடுபட்டுள்ளோம். இந்தத் தீர்மானம் இலங்கையில் அதிகளவான நல்லிணக்கம் - நீதி - பொறுப்புக்கூறல் - மனித உரிமைகள் ஆகியவற்றுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது.

இலங்கை அரசாங்கத்தை மத நம்பிக்கை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றுக்கான சுதந்திரத்தை மதிக்குமாறு நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம். இவை நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு அவசியான விழுமியங்களாகும். இன்றைய நாள் மனித உரிமைகள் - நீதி - பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்குக் குரல்கொடுக்கும் ஆதரவளிக்கும் எங்க ளின் கூட்டு கடப்பாட்டை நினைவு படுத்துகின்றது. சர்வதேச அளவில் மனித உரிமைகளை பாதுகாக்கும் நட வடிக்கைகளை கனடா ஒரு போதும் நிறுத்தாது - என்றுள்ளது. (ஐ)

## ஈரான்...

மற்றும் வெளியுறவு அமைச்சருனான தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை எனவே, அந்த ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கியிருக்கலாம் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

நிலைமையின் தீவிரத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், ஷியா புனித நகரங்களான மஷாத் மற்றும் கோமில் உள்ள புனிதத் தலங்களில் ரைசிக்காக பிரார்த்தனை செய்யும் வழிபாட்டாளர்களின் நேரடி காட்சிகளை அரசு தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

ஈரானின் கிழக்கு அஜர்பைஜான் மாகாணத்துக்கு ரைசி சென்று கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. விபத்து நடந்ததாக நம்பப்படும் இடத்துக்கு மீட்பு குழுக்கள் அனுப்பப்பட்டன என்று அரசு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேசமயம், இரண்டு மணி நேரம் நடந்த தேடுதலில் எதுவும் வெளிப்படவில்லை. பனிமூட்டம் அதிகமாக இருப்பதால் தேடுதல் மிகச்சிரமமாக உள்ளதாக நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ரைசி தவிர, ஹெலி கொப்டரில் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர்-அப்துல்லாஹியன் உட்பட பல அதிகாரிகளும் இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

63 வயதான ரைசி, 2021 இல் ஜனாதிபதியாக வருவதற்கு முன்பு ஈரானின் நீதித்துறையின் தலைவராக பணியாற்றினார். ஈரானின் உச்ச தலைவர் அலி கமேனியின் நெருங்கிய மற்றும் விசுவாசமான கூட்டாளியான அவர் கமேனியின் சாத்தியமான வாரிசாக அடிக்கடி விவாதிக்கப்படுகிறார்.

கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி ரைஸி இலங்கைக்கு வருகை தந்து உமா ஓயா அணைத் திட்டத்தை திறந்து வைத்து நாடு திரும்பியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித்...

ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பதால் பயனெதுவும் ஏற்படப்போவதில்லை என்ற மனோநிலையே மிகப் பெரும்பான்மையான தமிழ் மக்களிடம் காணப்படுகின்றது. எந்தவொரு பெரும்பான்மையின ஜனாதிபதி வேட்பாளரின் பெயரை குறிப்பிட்டும் அவருக்கு வாக்களியுங்கள் என்று கோர முடியாத அளவுக்கு அனைத்து சிங்களக் கட்சிகள் மீதும் வேட்பாளர்கள் மீதும் தமிழ் மக்கள் வெறுப்படைந்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் - பிராந்திய வல்லரசினதும் அதனுடன் கூட்டிணைந்து தமது பூகோள நலன்களை முன்னிலைப்படுத்தி செயல்படும் சர்வதேச வல்லரசுகளதும் நலன்களை பேணுவதற்காக - ஒத்திசைந்து செயல்படக்கூடிய குறித்த வல்லரசுகள் விரும்பும் வேட்பாளர் ஒருவரை வெற்றிபெற வைப்பதை இலக்காகக் கொண்டு, அந்த உண்மை நோக்கத்தை மக்களுக்கு மறைத்து, தமக்குத் தேவைப்படும் சிங்கள வேட்பாளருக்கு தமிழ் மக்கள் தமது இரண்டாவது விருப்பு வாக்கை செலுத்த வைப்பதற்கான கபட முயற்சி யையே 'தமிழ் பொது வேட்பாளர்' என்ற நாட ம் மூலம் அரங்கேற்ற முயல்கின்றார்கள்.

வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களது வாக்குகளைப் பெறாமல் எவருமே வெல்லமுடியாத சூழலே உள்ளது. ஆனால், இப்படியான நிலையிருந்தும் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தமிழ் மக்களுக்காக எதுவுமே செய்யத் தயாரில்லை என்பதே கள யாதார்த்தமாகும். தமிழ் மக்களுடைய வாக்குகள் இல்லாமல் எவருமே வெல்லமுடியாத ஒரு சூழலில் - தமிழ் மக்களின் வாக்குகளே "யாரை வெல்லவைப்பது?, யாரைத் தோற்கடிப்பது?" என்றவொரு நிலை உள்ளபோது - தமிழ் மக்களைக் கணக்கில் எடுக்கவே தயாரில்லாத ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதன் ஊடாக மட்டுமே மிகச்சிறந்த செய்தியை தமிழ் மக்களால் வழங்கமுடியும் - என்றுள்ளது.

# யுத்தம் தோன்றாத வகையில் நாட்டை நிர்வகிக்க வேண்டும்

### சொல்கிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மே 20

"இராணுவத்தின் வீரத்துக்கு உயரிய அந்தஸ்து வழங்கி எதிர்காலத்தில் மீண்டும் யுத்தம் தோற்றம் பெறாத வகையில் நாட்டை நிர்வகிப்பது அனைவரின் பொறுப்புமாகும்" - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15ஆவது ஆண்டு போர் வெற்றி தினமான நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும்," மூன்று தசாப்தங்களாக இலங்கையை ஆக்கிரமித்திருந்த பிரிவினைவாத - பயங்கரவாத யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

"1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு குழுவாக ஆரம்பமான தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலகில் பிரபல்யமான பயங்கரவாத அமைப்பாக எழுச்சி பெற்றது. தற்கொலை மனித குண்டுதாரிகள் மற்றும் சிறுவர் படையணி என்பனவற்றை விடுதலை புலிகள் அமைப்பே உலகுக்கு அறிமுகம் செய்தது. தற்கொலை குண்டுகள் அடங்கிய சிறியரக படகுகள், இரவு நேரங்களில் தாக்குதல் நடத்தக்கூடிய இலகு விமானங்கள் உட்பட ஆயுதங்களை கொண்டு வரும் கப்பல்கள் எனப் பலமான கட்டமைப்பில் புலிகள் அமைப்பு செயல்பட்டதை நினைவுகூர வேண்டும்.

"இலங்கை மற்றும் இந்திய அரச தலைவர்கள் இருவர் உட்பட இலங்கையின் சிரேஷ்ட அரச தலைவர்கள் மற்றும் சிவில் மக்கள் உள்ளடங்கலாக பலரை கொலை செய்த விடுதலை புலிகள் அமைப்புடன் பேச்சில் ஈடுபட பல்வேறு வழிகளில் அழைப்பு விடுத்தேன். சகல வழிகளையும் நிராகரித்து விடுதலைப் புலிகள் தாக்குதலை தொடர்ந்ததால் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் எதிர் தாக்குதலை தீவிரமாக முன்னெடுத்தோம்.

"யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு முப்படையினர் அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்கள். 2009.05.18 ஆம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுமையாக இராணுவத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து 2009.05.19 ஆம் திகதி காலை வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

"நான்காவது ஈழப் போராட்டத்தை தோற்கடித்தது மாத்திரமல்ல விடுதலை புலிகள் அமைப்பில் பணயமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பல இலட்சக்கணக்கான சிவில் பிரஜைகள் பாதுகாக்கப்பட்டார்கள். யுத்தத்தின் கொடுமையான அனுபவங்கள் இல்லாத சூழலில் தற்போது வாழ்கிறோம். ஆகவே, யுத்தம் பற்றி சிந்திக்கக்கூடாது என ஒருசிலர் குறிப்பிடுகிறார்கள். இராணுவத்தின் வீரத்துக்கு உயரிய அந்தஸ்து வழங்கி நாட்டில் மீண்டும் யுத்தம் தோற்றம் பெறாத வகையில் நாட்டை நிர்வகிப்பது அனைவரினதும் பொறுப்பாகும்" - என்றுள்ளது. (ஐ)

# கான்ஸ்டபிளின் கழுத்தை கடித்த சந்தேக நபர்

மொனராகலை, மே 20

வாக்குமூலம் பதிவு செய்வதற்காக சந்தேக நபர் ஒருவரை அழைத்துச் சென்ற கான்ஸ்டபிளின் கழுத்தைச் சந்தேக நபர் கடித்துள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இசை நிகழ்ச்சியின் போது மது போதையில் அநாகரிகமாக நடந்து கொண்ட நபரைக் கைது செய்து வாக்கு மூலம் பதிவு செய்யச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மொனராகலை - ஹூலந்தாவ பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## முதல்...

கைப்பற்றியிருந்தார்.

நான்கு ஓவர்கள் பந்து வீசிய வியாஸ்காந்த் 37 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தார்.

நடப்பு ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரின் 69 ஆவது லீக் போட்டி ஹைதராபாத் ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடந்தது. இதில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி. இதன் மூலம் புள்ளிகள் பட்டியலில் இப்போதைக்கு இரண்டாம் இடத்துக்கு அந்த அணி முன்னேறியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 214 ஓட்டங்கள் எடுத்தது. சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பில் நடராஜன் 2 விக்கெட்களை வீழ்த்தினார். வியாஸ்காந்த் மற்றும் கம்மின்ஸ் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

215 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் விரட்டியது. 19.1 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 215 ஓட்டங்கள் எடுத்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (எ)

## ரணிலுக்கே...

சந்தித்து ஆதரவை வெளிப்படுத்தினர்.

இந்தச் சந்திப்பு பஸில் ராஜபக்ஷவின் ஆலோசனையின்பேரில் நடை பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியும் பல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுகளை முன்னெடுத்து இணக்கப்பாடுகளை எட்டியுள்ளது.

இதேசமயம், அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இலங்கை...

நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்று ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2009ஆம் ஆண்டு ஆயுத மோதலின் இறுதி தருணங்களில் அரச ஆதரவுடன் நடைபெற்ற இனப்படுகொலையில் பலியானவர்கள் - உயிர் பிழைத்தவர்களை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் நினைவுகூரும் இந்தத் தருணத்தில் நான் எனது ஆதரவை அவர்களுக்கு வெளியிடுகின்றேன்.

இந்த குற்றங்களுக்கும் யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் நடந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கும் கண்மூடித்தனமான தடுத்துவைத்தல், சித்திரவதைகள், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான எந்த நேர்மையான நடவடிக்கைகளையும் இன்றுவரை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

இதனை விட மோசமான விடயம் என்னவென்றால் இடம்பெற்ற இனப்படுகொலையை நிராகரிக்கும் இலங்கை அரசாங்கம் சர்வதேச தலையீடுகள் திட்டமிட்டு பிழையான தகவல்களை வெளியிடுதல் - பரப்புதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பாராளுமன்றத்தைக் கலைப்பது ரணிலுக்கு சாதகமாக அமையாது

## எந்தத் தேர்தலுக்கும் தயார் என்கிறார் அநுர

கொழும்பு, மே 20

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்ற வேறு பாடில்லை. எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் தயார். வெற்றியோ? தோல்வியோ? அதனை நாங்கள் எதிர்கொள்வோம். எந்தத் தேர்தல் முதலில் நடத்த வேண்டும் என்று பொதுஜன பெரமுன தீர்மானிக்குமாயின் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எதற்கு? பாராளுமன்றத்தைக் கலைப்பது ஜனாதிபதிக்கு சாதகமாக அமையாது- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு - மஹரக பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஓய்வூதியலாளர்களின் தேசிய மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அதேபோன்று எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. ஆகவே இவ்விரு தேர்தல்களும் நிச்சயம் வெகுவிரைவில் இடம்பெறும்.

பாராளுமன்றம் எப்போது கலைக்கப்படும் என்பது தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டிய பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் தொடர்ச்சியாக பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

பதவிக் காலம் நிறைவடையும் வரை பதவியில் இருக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பாரே தவிர பதவிக் காலத்தை வரையறுத்துக் கொள்ளமாட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைத்தால் ஜனாதிபதிக்கு அதனால் எவ்விதப் பயனும் கிடைக்காது. ஜனாதிபதி வசமுள்ள சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, ஷெஹான் சேமசிங்க உட்பட பெரும்பாலானோர் ஜனாதிபதியை விட்டு மீண்டும் பொதுஜன பெரமுன பக்கம் செல்வார்கள்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டால் அது ஜனாதிபதித் தேர்தலுக்கும் செல்வாக்கு செலுத்தும். பொதுத் தேர்தலின் பெறுபேறுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மக்களாணையின் பலத்தை உறுதிப்படுத்தும். ஆகவே பொதுத் தேர்தலுக்கு சென்றாலும் செல்லாவிட்டாலும் ஜனாதிபதி நெருக்கடிக்குள்ளாகுவார்.- என்றார். (எ)

# சஜித் - அநுர இடையே விவாதத் திகதி அறிவிப்பு

கொழும்பு, மே 20

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார குழு மற்றும் கட்சித் தலைவர்களுக்கிடையில் இடம்பெறவுள்ள விவாதத்துக்காக திகதி வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் இரண்டு கட்சிகளின் பொருளாதார குழுக்களுக்கிடையிலான விவாதத்தை இந்த மாதம் 27 ஆம் திகதிக்கும் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட திகதி ஒன்றும் தலைவர்களுக்கிடையிலான விவாதத்தை ஜூன் மாதம் 3 ஆம் திகதிக்கும் 7ஆம் திகதிக்கும் இடையிலான ஒரு திகதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பாக தேசிய மக்கள் சக்திக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அத்துடன் இரண்டு கட்சிகளின் பொருளாதார குழு மற்றும் தலைவர்களுக்கிடையில் இடம்பெறும் விவாத நடவடிக்கைக்குத் தேவையான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்திடம் கோரியிருப்பதாகவும் விவாதத்துக்கான ஊடக நடவடிக்கைக்கு அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் நளின் பண்டார கூறினார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான விவாதத்துக்கான திகதி இன்று 20 ஆம் திகதியுடன் முடிவடைவதாகவும் அதன் பின்னர் இந்த விவாதம் தொடர்பாக நாங்கள் கதைக்கவும் மாட்டோம் விமர்சிக்கப்போவதும் இல்லை என தேசிய மக்கள் சக்தி அரசியல் சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (எ)

# 10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றுகிறார் ரணில்

ஜகார்த்தா, மே 20

இந்தோனேஷியாவில் இன்று நடைபெறும் 10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தோனேஷியாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அந்த நாட்டின் எரிசக்தி மற்றும் கனிம வள அமைச்சர் அரிபின் தஸ்ரிப் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே, இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதுவர் தேவி குஸ்டினா டோபிங் ஆகியோரும் இணைந்தனர்.

இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

பாலியிலுள்ள குஸ்தி நுரா ராய் சர்வதேச விமான நிலையத்தை நேற்று முன்தினம் சென்றடைந்த ஜனாதிபதி ரணில் விமான நிலையத்தில்

இராணுவ அணிவகுப்பு மரியாதையுடனும் பாரம்பரிய பாலி நடனக் கலைஞர்களின் நடன நிகழ்வோடும் வரவேற்கப்பட்டார்.

10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வு மே 18 - 20 வரை இந்தோனேஷியாவின் பாலி நகரில் "கூட்டு செழுமைக்கான நீர்" என்ற தொனிப் பொருளில் நடைபெறுகிறது.

இந்த நிலையில் இன்று திங்கட்கிழமை 20 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாநாட்டில் சிறப்புரை ஆற்றவுள்ளார். (எ)

# இந்தோனேஷிய அமைச்சரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



ஜகார்த்தா, மே 20

இந்தோனேஷியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தோனேஷிய கடல்சார் விவகாரங்கள், முதலீடுகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர் லுஹூத் பின்சார் பண்ட்ஜாய்டன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று "United In Diversity" வளாகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், Global Blended Finance Alliance அமைப்பின் நாடுகள், வெப்ப வலயத்துக்கான இலங்கையின் முன்னெடுப்பு (Tropical Belt Initiative), நீலப் பொருளாதாரம் (Blue Economy), கடற்பாசி தொழில்துறை போன்ற விடயங்கள் தொடர்பாக பேசப்பட்டது.

அதேபோல், தென்துருவ நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு, சதுப்புநில பயிர்ச்செய்கை தொடர்பான ஒத்துழைப்பு, செயல்திட்டத்துக்கான ஆராய்ச்சி ஒத்துழைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. (எ)

# மலையகத்தில் வாழும் கலை அமைப்பின் செயல்பாட்டினை ஆரம்பிக்க உதவுவேன்

## நுவரெலியாவில் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்



நுவரெலியா, மே 20

இலங்கையில் மலையகத்திலும் வாழும் கலை அறக்கட்டளை நிறுவகச் செயல்பாடுகளை ஆரம்பிக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த வேண்டுகோளுக்கு உதவுவேன் என வாழும் கலை பயிற்சி அறக்கட்டளை நிலையத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விசேட சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கையில் வரலாற்று சிறப்புமிக்க நுவரெலியா - சீத்தாஎலிய பிரதேசத்தில் அமைந்துள்ள சீதையம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த மஹா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இந்தியாவில் இருந்து ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வருகை தந்தார்.

இதன் பின் நுவரெலியா "கிரேண்ட் ஹோட்டல்" சுற்றுலா விடுதிக்கு வந்த ரவிசங்கர், அங்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி நீர் வளங்கள் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட சந்திப்பிலும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸின் தவிசாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பி. இராஜதுரை பாரத் அருள்சாமி உள்ளிட்ட இ. தொ. கா. உயர்பீட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரிடம் இலங்கையில் மலையக மக்களின் நலத்திட்டத்துக்காக பல கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ரவிசங்கர், வாழும் கலை அறக்கட்டளை அமைப்பின் செயல்பாட்டை மலையகத்திலும் பலப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதாகவும், பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க இடங் கள் உள்ளிட்ட வசதிகளை எதிர் பார்ப்பதாகவும் இதற்கான உதவி களை தனது அறக்கட்டளை நிறு வகம் ஊடாக வழங்குவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், ஆன்மிக கற்கை நெறி பாடசாலைகளை ஆரம்பித்தல், வாழும் கலை பயிற்சிகள், பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை தனது அறக்கட்டளை ஊடாக செய்து தருவதாகவும் உறுதியளித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 20.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.